# Centre for Research on the Economics of Ageing

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY

NEWSLETTER - ISSUE 6 DECEMBER 2017




## எங்களால் ஈடுபட இயலும் – மேலும் இவை எல்லாவற்றுக்கும் நீங்களே காரணம்!

CREA-க்கான 2017-ஐ விவரிப்பதற்கு ஒரு உரிச்சொல் இருந்தால், அது நிச்சயமாக “ஈடுபடுதல்” என்பதாகவே இருக்கும்.

அக்டோபர் மாதத்தின் இறுதியில், 2017-க்கான நமது நான்காவது மற்றும் இறுதி வட்டமேசைத் திட்டத்தை நாங்கள் நடத்தினோம். இந்த முறை மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் கருத்தாக்கமாக வேலை மற்றும் வேலை நியமனம் இருந்தது. பின்வரும் ஒவ்வொரு அரசாங்க அமைச்சின் பிரதிநிதிகள் உள்பட, நாடு முழுவதிலும் இருந்து சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டனர்: நிதி, சுகாதாரம், உள்துறை, மனிதவளம், தேசிய வளர்ச்சி, வர்த்தகம் மற்றும் தொழிற்துறை மற்றும் சமுதாய, குடும்ப மேம்பாடு.

SLP தொழிலாளர் பாடத்தொகுதியில் இருந்து சில சமீபத்திய முடிவுகளை டாக்டர் சியோங்ஹூன் கிம் அவர்கள் முன்வைத்தார். மூன்றில் ஒரு பங்கு பதிலளிப்பாளர்கள் அதிருப்தியின் காரணமாக வேலையில் இருந்து விலகியுள்ளதாக அது தெரிவிக்கிறது: குறைந்த ஊதியம், சகப்பணியாளர்களுடனான அவர்களின் உறவு, அல்லது பல மணிநேரம் வேலைசெய்ய வேண்டிய அவசியம் ஆகியவை அதற்கான மிகவும் பொதுவான காரணமாகும். 2% பதிலளிப்பாளர்கள் குறைந்த-கால ஒப்பந்த வேலைத் துறையில் வேலை செய்வதும் கண்டறியப்பட்டது. உதாரணமாக ஃகிராப் (Grab) அல்லது ஊபர் (Uber).

மேலும், அமெரிக்காவில் உள்ள RAND கார்பரேஷனில் இருந்து வந்திருந்த நமது அனைத்துல உடனுழைப்பாளர்களும் உரையாற்றினார்கள்.நமது பதிலளிப்பாளர்கள் பல திறன்களைக் கொண்ட ஓர் ஊழியர் அணியாக உள்ளனர் என்பதை பேராசிரியர் மைக்கேல் D. ஹர்ட் (Professor Michael D. Hurd) அவர்கள் கண்டறிந்தார்: மூன்றில் ஒரு பங்கு பதிலளிப்பாளர் தங்களின் தற்போதைய வேலையைக் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு வேலை பறிபோன போது, ஒரு மாதத்திற்குள் புதிய வேலை ஒன்றைக் கண்டறிந்தனர்.


இறுதியாக, தங்களின் 50 வயதுகளில் உள்ள பதிலளிப்பாளர்களின் எதிர்பார்ப்புகளை பேராசிரியர் சூசன் ரோவெட்டர் (Professor Susann Rohwedder) அவர்கள் ஆராய்ந்தார். பாதிக்கும் சற்றுக் குறைவான ஆண்கள் மற்றும் மூன்றில் ஒரு பெண்ணும் தங்களுக்கு 65 வயதாகும் போது கூட வேலை செய்துகொண்டிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். இந்த முடிவில் ஊடகத் துறை மிகவும் ஆர்வம் காட்டியது. ப்ளூம்பெர்க், சேனல் நியூஸ்ஏஷியா, லியானி ஸாபோ, லியானி வான்போ, ஷின் மின் டெய்லி நியூஸ், தி ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ், டுடே ஆன்லைன் மற்றும் மலேசியாவில் இருந்து வெளிவரும் தி ஸ்டார் ஆகியவை இது குறித்து கட்டுரைகளை வெளியிட்டுள்ளன.

### செய்திகளில் இடம்பெற்ற SLP



# விரைவுக் கண்டுபிடிப்பு: நடப்பு வேலை

## பதிலளிப்பாளர்கள் எப்போது தங்களின் தற்போதைய வேலையைத் தொடங்கினர்?




செப்டம்பர் மாதத்தில், எப்போது தங்களின் தற்போதைய வேலையைத் தொடங்கினர்கள் என்று வேலை செய்துகொண்டிருந்த பதிலளிப்பாளர்களிடம் கேட்டோம். மூன்றில் ஒருவர் தனது வேலையைக் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் மாற்றியுள்ளார் - பல திறன்களைக் கொண்ட ஊழியர் அணி. ஆனால், பலர் நீண்ட காலமாக, அதாவது சராசரியாக 15 ஆண்டுகளாகத் தங்கள் வேலையிலேயே தொடர்ந்து நீடிக்கின்றனர். தாங்கள் 1970-க்கு முன்னர் தங்களின் தற்போதைய வேலையைத் தொடங்கியதாக ஐம்பது சதவீத பதிலளிப்பாளர்கள் தெரிவித்தனர்.

# 2018 -ஐ ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்

2018-ஆம் ஆண்டு CREA-இல் மிகவும் கிளர்ச்சியூட்டும் (மற்றும் பரபரப்பான) ஆண்டாக இருக்கப் போகிறது. வரும் மாதங்களில், பயிற்சி, நம்பிக்கை, தொண்டூழியம், நேரப் பயன்பாடு, பராமரிப்பு வழங்குதல் மற்றும் பணி ஓய்வு உள்ளிட்ட பலதரப்பட்ட பாடங்களில் புதிய SLP கேள்விகளைச் சேர்க்க உள்ளோம். எங்களது கருத்தாய்வில் உங்களை ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் வைத்துக்கொள்ள விரும்புகிறோம். ஒவ்வொரு மாதமும் SLP கருத்தாய்வை நிறைவுசெய்வதற்கு நீங்கள் செலவிடும் நேரம் மற்றும் முயற்சியை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம். எங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கான உங்களின் உறுதியேற்பு, ஆகச் சிறந்த ஆராய்ச்சியை உருவாக்க உதவுகிறது.

# கருத்தாய்வுகளின் தேதிகள்

- ஜனவரி மாதக் கருத்தாய்வு: **1-21 ஜனவரி 2018**
- பிப்ரவரி மாதக் கருத்தாய்வு: **1-18 பிப்ரவரி 2018**
- மார்ச் மாதக் கருத்தாய்வு: **1-25 மார்ச் 2018**

# கூட்டம் நடைபெறும் இடங்கள்

எங்கள் மாணவர்களின் துணையுடன் இக்கருத்தாய்வை நிறைவுசெய்ய விரும்பினால், நீங்கள் பின்வரும் ஏதேனும் அமைவிடங்களைப் பார்வையிடலாம். சந்திப்புத் திட்டங்களின் தேதி மற்றும் நேரத்தை அறிந்துகொள்வதற்கு, தயவுசெய்து எங்கள் நிலையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளுங்கள்.

**பீஷான்**
ஸ்ப்ரிங் காலேஜ் இண்டர்நேஷ்னல்
512 பீஷான் தெரு 13, சிங்கப்பூர் 570512

**புக்கிட் மேரா**
ரெக்கவரி அக்கவுண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
164 புக்கிட் மேரா சென்ட்ரல் #03-3655, சிங்கப்பூர் 150164

**ஜூரோங் கிழக்கு**
ஜூரோங் ரீஜனல் லைப்ரரி லெவல் 1, ரிகஸ் பிசினஸ் லாஞ்
21 ஜூரோங் கிழக்கு சென்ட்ரல் 1, சிங்கப்பூர் 609732

**தெம்பினிஸ்**
NTUC இன்கம் பில்டிங், லெவல் 9 தெம்பினிஸ் ஜங்ஷன்,
300 தெம்பினிஸ் அவென்யு 5, சிங்கப்பூர் 529653

**செம்பவாங்**
ஜஸ்ட் எஜுகேஷன் டியூஷன் சென்டர்
30 செம்பவாங் ட்ரைவ்
#04-04 சன் பிளாஸா, சிங்கப்பூர் 757713

# இரகசியக்காப்பு மற்றும் உங்களின் தனியுரிமை

நீங்கள் எங்களிடம் வழங்குகின்ற தகவல்களை நாங்கள் கடும் இரகசியமானதாகக் கருதி பாதுகாப்போம். மேலும், சிங்கப்பூர் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டத்திட்டங்களின் கீழ், தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) உடன் முழுமையாக இணங்கி நடப்போம்.



# எங்களைத் தொடர்புகொள்க

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வடிவத்தில் உதவி தேவையென்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, கருத்துக்களோ இருந்தால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY